ஆனால் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு அரசின் கவனத்திற்கு அது வந்த உடனே துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

ஊ. இராமநாதபுரம் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் பால் வாங்கப்பெறுவது குறித்து.

திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

"இராமநாதபுரம் மாவட்டம், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ள விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு பால் கொள்முதல் செய்வதால், அவர்கள் கடனைத் திருப்பித் தருவதில் உள்ள சிரமம் குறித்து,"

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் கொள்முதல் விலை வறட்சி காலத்தில் (Lean Season) எருமைப் பாலுக்கு ஒரு கிலோ கொழுப்புச்சத்துக்கு ரூ. 26-ம் பசும்பாலுக்கு—ஒரு கிலோ திரண்ட மொத்த சத்துக்கு ரூ. 12-ம் கொடுக்கப்படுகிறது. பால்பெருக்கு காலத்தில் (Flush Season) எருமைப்பாலுக்கு ரூ. 24-ம், பசும்பாலுக்கு ரூ. 11-ம் கொடுக்கப்படுகிறது. இதன்படி சராசரி 7 சதவிகிதம் கொழுப்புச் சத்துள்ள எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1·55-ம் 4 சதவிகிதம் கொழுப்புச்சத்தும் 8·5 சதவிகித கொழுப்பற்ற திண்மை பொருளும் உள்ள பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1·40-ம் கொடுக்கப்படுகிறது.

ஒரு கறவை மாடின் விலை ரூ. 2,500 (மானியம் ரூ. 1,000, கடன் ரூ. 1,500) ஒரு கலப்பின் பசு தனது 300 நாள் கறவையில் நாள் ஒன்றுக்கு 8 லிட்டர் வீதம் 2,400 லிட்டர் பாலும், முரா எருமை நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் வீதம் 2,100 லிட்டர் பாலும் கொடுக்கவல்லது. பசுவிற்கு கறவை மறப்பு காலம் 120 நாட்களும், எருமைக்கு 180 நாட்களும் ஆகும்.

1979 ஏப்ரல் 27] [திரு. ப. குழந்தை வேலு]

ஒரு கறவைமாட்டின் விலை (அதாவது திருப்பி அடைக்க வேண்டிய கடன்), பராமரிப்பு செலவு, (தீவனச் செலவு) காப்புறுதி செலவு மற்றும் (இதரச் செலவுகள்) வருமானம் முதலியன, இரண்டு வருடங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

முதல் வருடம்.

	முரா எருமை.	கலப்பின் பசு.
	ரூ.	ரூ.
வருமானம் (பால் மற்றும் எரு விற்பனை மூலம்).	3,305·00	3,00·500
கறவை மாட்டின் பராமரிப்புக்கான செலவு.	3,047·50	3,047·50
நிகர இலாபம் ..	257·50	2·50

இரண்டாவது வருடம்.

வருமானம் (பால் மற்றும் எரு விற்பனை மூலம்). ..	2,762·50	3,050·00
கறவை மாட்டின் பராமரிப்புச் செலவு. ..	2,740·00	2,965·00
நிகர இலாபம் ..	22·50	85·00

இரண்டு கறவைக்காலங்களிலும் கிடைக்கக்கூடிய கன்றுகளின் மதிப்பு கணக்கில் எடுத்துகொள்ளப்படவில்லை. இவ்விரண்டு கன்றுகளில் ஒன்று கிடேரி கன்றானால் அவற்றின் மதிப்பில் விவசாயி கூடுதல் இலாபம் பெற வழியுண்டு. மானியம் ரூ. 1,000 கிடைக்காத விவசாயிகளுக்கு முழுக்கடனையும் அடைக்க மூன்று கறவை காலங்கள் தேவைப்படும்.

எனவே கறவை மாட்டிற்கு வாங்கிய கடனை தற்போது வழக்கில் இருக்கும் கொள்முதல் விலைப்படி திருப்பி அடைப்பதில் சிரமம் எதுவும் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 27

(முற்பகல் 10–50)

திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அது வறட்சிக்கு இலக்கான பகுதி என்ற அடிப்படையிலும், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலும் 1,500 ரூபாயைக் கடனாக வழங்குகிறார்கள். அதிலே 500 ரூபாய் இங்கே மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆயிரம் ரூபாயை விவசாயிகள் திருப்பித் தர வேண்டும். ஆனால் நமது அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறபொழுது 7 சதவிகிதம் என்ற அளவிற்கு அசல் கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.55 கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எங்கள் பகுதி வறட்சியான பகுதி, அங்கே சரியாக இருந்தால் 6 அல்லது 4 இருக்கிறது. அப்படி 6, 4 என்று இருந்தால் ரூ. 1.40க்கு உற்பத்தியாளர்கள் சங்கம் மதுரை பால் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் அமைத்திருக்கிறார்கள். அங்கு ரூ. 1·80-க்குக் கொள்முதல் செய்கிறார்கள். உற்பத்தியாளர் சங்கம் ரூ. 1.40-க்குக் கொள்முதல் செய்யும் அதேநேரத்தில் விநியோக சங்கத்தில் ரூ. 1.80 என்று கொடுக்கிறார்கள். இப்படி லிட்டருக்கு 40 பைசா வித்தியாசம் இருப்பதால் ஏழை விவசாயிகள் கடனைத் திருப்பித் தருவதற்குச் சிரமம் ஏற்படுகிறது. எனவே, தமிழ் நாட்டிலே உள்ள விலை மாதிரி ஒரே விலையை இராமநாதபுரம் மாவட்டத்திலேயும் அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மானியம் கொடுப்பதிலே, அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் என்றால், டி.பி.எ.பி. திட்டம் இருக்கும் மாவட்டம். வறட்சிக்கு இலக்கான பகுதித் திட்டம் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. 2,500 ரூபாய் ஒரு மாட்டுக்கு விலை ஆகிறது என்றால், 1,500 ரூபாய் கடனாகவும், 1,000 ரூபாய் மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. மேலும் கொடுக்கப்படும் விலை அங்கே கிடைக்கக் கூடிய கொழுப்புச் சத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. 7 சதவிகிதம் கொழுப்புச் சத்து இருந்தால் ரூ. 1.55 லிட்டர் ஒன்றுக்கு கொடுக்கப்படுகிறது. பசும்பாலுக்கு ரூ. 1.40 கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் அனுசரித்துத்தான் விலை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS